சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

முன்னிலை: **திரு.D.மாரிக்காளை.,B.Sc.,M.L.,**
**சார்பு நீதிபதி, கோவில்பட்டி.**
**2026** ம் ஆண்டு ஜுலை மாதம் **20** ம் நாள் திங்கள்கிழமை.

**<u>அசல் வழக்கு.எண்.140/2025</u>**

[CNR.No.TNTT050005362025]

------

1)முண்டசாமி
2)ராமலட்சுமி ...வாதிகள்

/எதிர்/

1)ஆனந்தி
2)சங்கரராஜ்
3)ரவிசந்திரன்
4)லோகு லேண்ட் அன்ட் பார்ம் டெவலப்பர்ஸ்
அதன் நிர்வாக இயக்குநர் மூலம்
5)சௌந்திரபாண்டி
6)ராம்பிரசாத்
7)முத்துக்கனி
8)ஸ்பீட் பூமி ப்ரோமொடேர்ஸ் அதன்
நிர்வாக இயக்குநர் மூலம். ...பிரதிவாதிகள்

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக (20.07.2026) தேதியன்று இறுதிவிசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.J.இசக்கிமுத்து அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.V.சம்பத்குமார் அவர்கள் ஆஜராகியும், 8ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.விஜயபாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், வழக்கு 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்பு செய்ய படி(Batta) கட்டவும், 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவும் வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வழக்கை மேல்நடத்தவில்லை என்று குறிப்பாணை தாக்கல் செய்து மற்றும் அதை பதிவு செய்ததன் அடிப்படையில், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

உரிமையியல் நடைமுறைச்சட்டம் ஆர்டர் 7, ரூல் 1, பிரிவு 26-ன்கீழ் பிராது தபசில் சொத்து வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும் அதை அனுசரித்து பிராது தபசில் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்வதை பிரதிவாதியோ அவரது வகையாட்களோ எந்தவிதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், பிரது தபசில்

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.20 17:39:05 +0530

சொத்துக்களை பொறுத்து மோசடியாக சிநேகம் அக்ரோ இண்ட்ஸ்ட்ரீஸ் எக்ஸ்போர்ட் லிமிடெட் நிறுவனத்தை நடத்தி வந்த அரவிந்த் என்பவர் பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவண எண்.4257/1955 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் பிறப்பிக்கும்படிக்கும், பிராது தபசில் சொத்துகளை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதி பெயருக்கு செய்து கொடுத்த கோவில்பட்டி சார்பதிவாளர் சரகம் கிரைய ஆவண எண்.9801/2014 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் பிறப்பிக்கும்படிக்கும், பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து மோசடியாக 5–ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட பொது அதிகார ஆவண எண்.1213/2008 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் பிறப்பிக்கும்படிக்கும், பிராது தபசில் சொத்துகளை பொறுத்து 5ம் பிரதிவாதி 6 மற்றும் 7–ம் பிரதிவாதிகள் பெயருக்கு செய்து கொடுத்த கோவில்பட்டி சார்பதிவாளர் சரகம் கிரைய ஆவண எண்.1834/2009 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் பிறப்பிக்கும்படிக்கும், பிராது தபசில் சொத்துகளை பொறுத்து 4,6,7–ம்பிரதிவாதிகள் 8–ம் பிரதிவாதி பெயருக்கு செய்து கொடுத்த கோவில்பட்டி சார்பதிவாளர் சரகம் கிரைய ஆவண எண்.2330/2025 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் பிறப்பிக்கும்படிக்கும், மற்றும் வழக்கு செலவுதொகையை வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும்படிக்கும் கேட்டு வாதிகளால் பிரதிவாகளுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2)இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். வாதி தரப்பில் வழக்கை மேல்நடத்தவில்லை என்று குறிப்பாணை தாக்கல் செய்து மற்றும் அதை பதிவு செய்ததன் அடிப்படையில் வாதியின் அசல் வழக்கு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 20ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.20 17:39:24 +0530

சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.

சார்பு நீதிமன்றம்,கோவில்பட்டி.
அசல் வழக்குஎண்,140/2025
நேரிய தீர்ப்புரை
நாள்: 20.07.2026